237

பதிவு எண் — வெள்ளிக் கிழமையில் குருகுலக் கிளர்ச்சித் தாள்

# முல்லைக்கொடி

தமிழ்க் கிழமை வெளியீடு :- இது, சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

| கிளை—ரு. | குருகுலம், மாம்பாக்கம் ; விகிருதி, மார்கழி ; 22—12—50. | தளிர் ௧௰ |
|---|---|---|

"குணநலம் சான்றோர் நலனே ; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

"கடனென்ப நல்லவை யெல்லாம் ; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு"

OFFICE OF THE REGISTRAR
1 JAN 951
MADRAS

## மார்கழி பிறந்தது !

பீடுடை மார்கழி பிறந்தது; நல்லருள்
நாடும் வாழ்வினீர்! நலனுற வைகறைப்
போதினில் எழுந்து பொற்பொடு பாவையும்
ஆதியின் பள்ளி எழுச்சியும் அன்பொடு
பாடுமின், பணிமின், பயன்படும் பணிபல
நாடுமின், அன்பர் கூடுமின்! நாளும்
வைகறைப் போழ்தில் வளங்கெழு வாழ்வினைச்
செய்கையிற் றேடுவோர் செயத்தகு கடமைகள்
பலவுள வாமவை பற்பலர் நம்மிற்
குலவுநற் கிளர்ச்சியிற் குறிக்கொள லில்லை;
பனிநாட் காலையிற் றனியாய்ப் பரவும்
சோம்பரும் துனியும் துடைப்பான் எண்ணிப்
போதரும் தைக்கு முன்வரும் புனிதத்
தீதகல் மார்கழித் திங்களை வைகறை
யாகக் கொண்டே ஆற்றுமின், இந்த
நாட்களி லேனும் நல்வழிப் பாலன;
ஆன்றோர் காட்டும் அருநெறி போற்றி,
நோன்றே அவற்றின் நன்மைகள் காணப்
பூண்போம் உறுதி; போதுமின்!
மாண்பார் மார்கழி நீரா டற்கே!

— தமிழ்ச் சிறுவன், சைதை.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 2. தனித் தாள்—அரையணா

## - கந்தர் செய்திகள் -

கலியுக தெய்வம் கந்தன். கலியுகத்தில் வரம் கொடுக்க வந்தவன். வேறு எவரேனும் உளரெனின், அவர்களுக்கும் இவனுக்கும் உள்ள வேறுபாட்டைப் புலப்படுத்தக் 'கலியின் கல்மிஷத்தைப் போக்குதலில் சமானமில்லாதவர்' என்று வடமொழிக் காந்தம் சனற்குமார சம்மிதையில் முதல் சருக்கத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

தனக்குப் பெருந்தீமை செய்தவனாயினும் அவன் அன்பனாயின், (கந்தன்) அருள் செய்குவான். திட்டினும் மகிழ்கின்றான். ஏன்? 'நம்மை ஆதாரமாகக் கொண்டுதானே திட்டுகின்றான்' என்பது அவன் எண்ணம். "முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்."

—ஞானியாரடிகள்.

* *

ஸ்ரீ அருணகிரியார், "முருகா என்கிலை! நெஞ்சமே நமக்குத் தஞ்சமேது" என்று கந்தரலங்காரத்தில் கூறுகின்றார். "கிரி யெட்டும் துளைத்தோடும் வேல் என்கிலை; முத்தி கிட்டுவது எங்ஙனே?" என்றும் கூறுகின்றார். ஆகவே, 'வேல்' என்றும் 'முருகா' என்றும் சொல்லிச் சொல்லி இதயம் முருகன் அன்பினில் நனைந்தாலன்றி, அவன் அருள்பெற முடியாது என்பர்.

—திருப்புகழ் மணி.

* *

முருகக் கடவுளுக்கு மிகவும் உகந்த பாமாலை. முருகபிரானது திருவடி முதல் திருமுகம் வரையும் உள்ள அங்கங்களின் சிறப்பையும், அவர் ஊர்தி படை கொடி இவைகளின் பெருமையையும் எடுத்தோதும் நூலாதலால் இந் நூலுக்குக் 'கந்தர் அலங்காரம்' என்னும் திரு நாமம் வாய்த்தது.

—தணிகைமணி.

* *

கி. பி. 600 முதல் 640 வரை ஆண்ட மஹேந்திரவர்மன் காலத்தியவை, முக்கியமாகக் குகைக்கோயில்களேயாம். தோரணங்கள் இரட்டைச் சுருள் உடையவை. தூண்கள் சதுர வடிவமான நான்கு பக்கங்கள் உடையவைகளாயிருக்கும். குகைக்கோயில்களில் முதலில் சோமாஸ்கந்த மூர்த்தம் நிர்மாணிக்கப்பட்டது. பிறகுதான் லிங்கங்கள் நடுவில் வைக்கப்பட்டன. (இது என் அபிப்பிராயம், இவ் விஷயம் இன்னும் ஆராயத் தக்கது.)

இதற்கு உதாரணமாக மஹாபலிபுரத்திலிருக்கும் சில குகைக்கோயில்களைக் கூறலாம்.

மிகவும் புராதனமான பல்லவக் குகைக் கோவில்களிலும், கட்டிடக் கோவில்களிலும் கர்ப்பக் கிரஹத்தின் உட்புறச் சுவரில் 'சோமாஸ்கந்த மூர்த்தி' செதுக்கப்பட்டிருந்தது.

—ராவ்பகதூர் ப. சம்பந்தம்.


வித்தியா
இஞ்சினியரிங் ஒர்க்ஸ்
இரும்பு பித்தளைக் கடைசல் தொழிற்சாலை,
1 & 2, பிள்ளையார் கோவில் தெரு,
P. T., சென்னை.

கைத்தறி ஆடைகள்
வணிகக் குறி!
—N. K. M.—
தங்க நாடா
(பதிவு)
எண் 20 முதல் 100 வரையில்
வேட்டி, சேலை, துண்டு, போர்வை, மேலாடை முதலியவை பல வகைகளிற் கிடைக்கும்.
நூலாடைகட்கும்
பட்டாடைகட்கும்
நம்பிக்கையான இடம்:
கருப்பண முதலியார்,
துணி வாணிபம்,
53, கிடங்குத் தெரு, சென்னை 1.


## அலங்கார - - - - ஆராய்ச்சி

(ராவ்பகதூர் திரு. வ். சு. செ. M.A.)

அருணைத் திருக்கோபுரத்தே வடவருகிற் சென்று கண்டுகொண்டேன்" எனவரும் காப்புச் செய்யுளால் இந் நூல் திருவண்ணாமலையிற் புனைதல் பெற்றிருத்தல் வேண்டுமென்று தோன்றுகின்றது.

நூற்பயன் கூறுஞ் செய்யுளில் "அலங்கார நூற்றுள் ஒரு கவிதான் கற்று அறிந்தவரே" என வருதலால், இந்நூல் நூறு செய்யுள்கள் கொண்டதாய் இருத்தல் வேண்டும்.

நூற்றுக்கு மேற்பட்ட ஆறு பாடல்களின் வாக்கு ஸ்வாமிகள் வாக்குப் போலச் சிறந்ததாயிருப்பதால், அவர் செய்த தனிச் செய்யுள்களோ இவை என்னும் ஐயமும் நிகழ்கின்றது. * *

அண்ணல், தம்மை ஆட்கொண்டு உபதேசித்த பிறகுதான் இந்நூலை ஸ்வாமிகள் பாடியிருத்தல் வேண்டும்.

காலனையே விளித்து வெருட்டி வெருட்டித் திடுக்கிட் டோடும்படி அச்சுறுத்தியுள்ளார். இதனை நோக்குமிடத்துத், திருப்புகழ் பாடிப்பாடி முருகன் திருவருள் ஊறி ஊறிச் சிந்தை தெளிந்த திண்மை நிலையில் இச் செய்யுள்கள் பாடப்பட்டிருத்தல் வேண்டும் என்பது பெறப்படும்.

"செங்கோடனைச் சென்று கண்டு தொழ நாலாயிரங்கண் படைத்திலனே" என்பது, செங்கோட்டு வேலவர் திவ்விய சொரூபத்தை நேரிற் றரிசித்துச் சொல்லியதாதலின், திருச்செங்கோட்டைத் தரிசனம் செய்த பிறகு 'கந்தரலங்காரம்' பாடியிருத்தல் வேண்டும். * *

இந்நூலில் இரண்டு விஷயங்கள் கவனிக்கத்தக்கன. ஒன்று அவர் வயலூரைப் பற்றி ஒன்றுங் கூறாதது. பிறிதொன்று ஞானசம்பந்த மூர்த்தியை முருக பிரானாகத் திருப்புகழிற் பாராட்டியவாறு இங்கு ஒன்றும் கூறாதது. * *

நூலிற் கூறியுள்ள உபதேச மொழிகள் :

"கவியை எழுத்துப் பிழையறக் கற்றல் வேண்டும்; மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்; வெகுளியை விடல்வேண்டும்; தானம் என்றும் இடல் வேண்டும். ஏழைகளுக்கு நொய்யிற் பிளவளவேனும் பகிர்தல் வேண்டும். மயில் வாகனனைச் சாந்துணைப்போதும் மறத்தலாகாது."

கந்தரலங்காரத்துள் கீழ்க் குறித்துள்ள பன்னிரு பாடல்களை நித்திய பாராயணப் பாடல்களாகக் கொள்ளலாம் :

தடுங்கோள் மனத்தை (16), முடியாப் பிறவி (33), கோடாத (76), சிந்திக்கிலேன் (60), விழிக்குத் துணை (70), நாளென் செயும் (38), வேலாயுதன் (86), ஓலையும் (27), பத்தித் திருமுகம் (47), தெய்வத் திருமலை (23), உதித்தாங்கு (39), மைவரும் கண்டத்தர் (84).

நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்




யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை 1.

# அலங்கார நிறைவு

[இ. அ.]

'அலங்காரம்' அனைவர்க்கும் இன்பம் தருவது. அலங்காரம், நாகரிக அறிவின் அடையாளம்; கலைச்சுவை, மெய்ச்சுவைகளின் எடுத்துக்காட்டு.

சுற்றுப் பக்கங்களை அலங்காரமாக வைத்துக் கொள்ளவும், உடம்பை ஆடை அணிகலன்களால் அலங்கரித்துக் கொள்ளவும் பொதுவாக மக்கள் எல்லாரும் விரும்புகின்றனர்.

உடம்பை நோய் இல்லாமல் வைத்துக் கொள்வது இன்னும் நல்ல அலங்காரமாகும். அதுதான் இயற்கை அலங்காரம்; தேகம் கலங்கா அலங்காரம்!

இதற்கு, மனம் அறிவு உணர்வு என்னும் உள் நிலைகள் அலங்காரமாயிருக்கவேண்டும். மனம் முதலியவற்றை அலங்கரிப்பது எப்படி?

அலங்கார உருவினனான கந்தனை, மயில்வாகனனைச் சாந்துணைப் போதும் மறவாமல் மனம் முதலியவற்றில் பதித்துக்கொண்டால், அவை அலங்காரமாய்விடும்.

அவை அலங்காரமாய்விட்டதற்கு ஒரு நல்ல அடையாளம் உண்டு; அது, ஆருயிர்த் தொண்டாகிய அவிரோத ஞானச் சுடர்!

உலகத்தில் அன்புடன் உயிர்களுக்கு இயன்ற தொண்டுகள் செய்தலாகிய சுடர் வீசும் அலங்காரத்தை அடைந்தவர்கள், உள்ளும் புறம்பும் இயற்கை அருள் அலங்காரம் உடையவர்களாய் விளங்குகிறார்கள்.

அவர்கள் தொண்டுகள் அப்போது, வேந்தர்க்கும் கொடு நோய்களுக்கும் இடமில்லாமல், புலி கரடி யானை முதலிய விலங்கினங்களுக்கும் கலங்காமல் நிகழ்ந்துவரும்.

உடம்பும் சூழலும், அப்போது, தாமே அலங்காரம் பெற்று, எதற்கும் கலங்காத இயற்கையான விடுதலை நிலையில், அதாவது, கந்தரலங்காரத்தில், மக்கள் விளங்குவர்.

ஆகவே, அலங்காரம் என்பது கலங்காத நிலை; நிலை கலங்காத நிலை; இருந்தபடி இருக்கும் இயல்பான நிலை. உண்மை நிலை. அதுதான் நல்லம் யாம் என்னும் நடுவு நிலை. தூய நிலை. பெரிய அழகு நிலை! நல்ல அலங்கார நிலை!

சலங்காணும் வேந்தர் தமக்கும்
அஞ்சார்; யமன் சண்டைக்கு
அஞ்சார்;
துலங்கா நரகக் குழியணுகார்; துட்ட
நோய் அணுகார்;
கலங்கார் புலிக்கும் கரடிக்கும்
யானைக்கும்; கந்தன் நன்னூல்
அலங்கார நூற்றுள் ஒருகவிதான்
கற்று அறிந்தவரே.

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros;
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

## நிகழ்ச்சிகள்

பம்பாயில் உணவு மாநாடு முடிந்தது. 37 'லக்ஷம்' டன் உணவு இறக்குமதி செய்யவும் 45 'லக்ஷம்' டன்னுக்கு மேல் உள்நாட்டில் கொள்முதல் செய்யவும், குறுகிய காலப் பயிருக்கு மிக்க முயற்சி எடுக்கவும் மாநாடு தீர்மானித்தது.

வரும் ஆண்டிற்கு 4 'லக்ஷம்' டன் உணவு சென்னைக்கு ஒதுக்கியிருப்பதாக உதவி உணவு அமைச்சர் இந்திய ஆட்சி மன்றத்தில் அறிவித்தார்.

* *

அமெரிக்காவில் படைப் பெருக்கத்திற்கு 181 கோடி டாலர் ஒதுக்கப்பட்டிருக்கின்றதாம்.

* *

ஐரோப்பாவுக்கெனக் கூட்டுத் தலைமைப் படை ஒன்று நிறுவ, முயற்சி நடைபெற்று வருகின்றது.

* *

வடகொரியர் மீண்டும் தென்கொரியாவில் படை யெடுத்துச் செல்வதென்று தீர்மானித்துவிட்டனர்.



தமிழ்த்தாய்.

'எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."
—புறநானூறு.

| கிளை | விகிருதி, மார்கழி | தளிர் |
|---|---|---|
| 3 | 22-12-50 வெள்ளி | 10 |

## - ஆக்க வேலைகள் -

வாழ்க்கை அமைதிக்கு உரிய நன் முயற்சிகளெல்லாம் ஆக்க வேலைகள் எனப்படும். வாழ்க்கைக் கொந்தளிப்புக்கு உரிய முயற்சிகள், உருவான வேலைகள் அல்ல.

முன்னேற்றம் என்பது, அமைதிக்குரிய சூழல் வளர்ச்சிகள்! அமைதி பயவாமற்போனால் அவையெல்லாம் பிற்போக்குச் செய்கைகளே!

மக்களிற் பலர், எவ்வளவுதான் கல்வி மிகுத்தாலும், எவ்வளவுதான் நிலைமைகள் உயர்த்தினாலும், எவ்வளவுதான் நடையுடை நினைவுகளைக் கவர்ச்சியாய் மாற்றினாலும், எவ்வளவுதான் உலகந் தெரிந்த வகையில் அர சறந்த நிலையில் அருஞ்செயல்கள் செய்து பெயரெடுத்தாலும், அவையெல்லாம் உலகத்தார்வாழ்வுக்கும் அவர் உள்ளத்துக்கும் அமைதி தராமலும் போகலாம். அத்தகைய செயல்கள் ஆக்க வேலைகள் ஆகமாட்டா; ஆரவாரச் செயல்கள் என்றே கருதப்படும்.

"மனத்தின்கண் மாசில
னாதல் அனைத்தறன் ;
ஆகுல நீர பிற"

என்னுந் திருவள்ளுவர் திருமொழியே இத் துணிபுக்குச் சான்று.

செல்வம் பெருக்குதல் முதலியன குற்றமன்று; அச் சூழலெல்லாம் வாழ்வமைதிக்கு இடஞ்செய்யும் முறையில் பெருகிவர வேண்டும்; அப்போதுதான் அவை முன்னேற்ற முகமாக நடைபெறும் நன்முயற்சிகள் எனப்பெறும்; அதாவது ஆக்க வேலைகள் எனப்பெறும்.

நாடு பெற்றுவிடலாம்; ஆட்சியும் அடைந்து விடலாம்; யாருக்கும் அமைதியில்லாத வகையிலும் அவை ஆரவாரமாய்ப் பெயரெடுத்து வரலாம். என்ன பயன்?

ஒரு நாட்டின், மக்கள் முயற்சிகளும் அரசினர் முயற்சிகளும், இத்தகைய பிற்போக்கு ஆரவாரத்தில் உருவில்லாத நிலைகுலைவில் நிகழ்ந்துவருமானால், அந்த நாட்டில் மெய் பொருந்திய நல்வாழ்வு எவ்வாறு ஓங்கும்?

காந்தியடிகள் அதனாலேயே ஆக்கப்பணித் திட்டங்களில் தொண்டர்கள் கருத்திருத்தும்படி வேண்டினார்; தாமும் அதற்கான உருவான செய்கைகளைச் செய்து வந்தார்.

தமிழ் நாட்டின் முன்னைப் பெரியோர் பலரும் மாதரசிகள் பலரும் இத்தகைய ஆக்கப் பணி வீராகவே தொண்டாற்றி வந்தனர். தெய்வத் திருவள்ளுவர் ஒளவையார் போன்ற மூதாதையர் அப்படிப்பட்ட ஆக்கச்செயல் வீரர்!

அமைதியாய் வாழவேண்டுமானால், அதாவது உள்ளத் தன்மையுடன் உயர்ந்த நல்வாழ்வில் வளம்பெற வேண்டுமானால், நாட்டுமக்கள், இயற்கை வளமும் எழிலும் நிரம்பிய தத்தம் கிராமங்களிலேயே தங்கவேண்டும்;

இல்லையென்னாமல் ஆண்டுதோறும் திரும்பத் திரும்ப உணவுப் பொருள் உதவும் நீர் நிலங்களை உழுது நல்லுணவுப் பெருக்கம் செய்யவேண்டும்; சிற்றுயிர்களை இரக்கத்துடன் போற்றுந் திறமாகிய இயற்கைப் பாற்பண்ணைகள் அமைத்துக்கொள்ள வேண்டும்.

கையால் நூற்றுக் கைத்தறிகளால் நெய்தல் போன்ற எளிய இனிய குடிசைத் தொழில்களை மேற்கொள்ளவேண்டும்.

வாழ்க்கைக்கு இன்றியமையாத தீங்கு பயவாத உள்நாட்டுக் கைத்தொழிற் பொருள்களையும் வெளிநாட்டு நற் பண்டங்களையும் வாய்மையோடும் இரக்கத்தோடும் வாணிபமாற்றிப் பொருள் செய வேண்டும்.

வாழ்க்கைக்குப் பயன்படும் கல்வியறிவிலும், நன்னடக்கை காக்கும் ஆட்சியுணர்விலும், உளங்கலந்து வாழும் ஒற்றுமைப் பண்பிலும், இயற்கையோடு ஒன்றும் ஒழுகலாற்றிலும் தெளிவும் உறுதியும் அன்பும் திறமும் வாய்ந்த செயல்களைச் செய்துவர வேண்டும்.

சூழலில் உள்ள மனிதரும் தத்தம் வாழ்க்கை வழியிற் செல்லும் சிற்றுயிர்களும் தத்தம் பிறவி நலங்களில் உயர்தலும், எந்நிகழ்ச்சியும் உலகத்தில் அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை

என்னும் நாகரிகச் சான்றாண்மையில் நிகழ்தலும் உலக அமைதிக்கு இடந்தருமாதலின், அவற்றின் நிறைவேற்றத்துக்கு உறுதுணையாய்த் தம் வாழ்க்கையை நடத்திவரவேண்டும்.

இவையெல்லாம் உருவான ஆக்கப் பணிகள் என்பதில் ஐயமில்லை. ஏனென்றால், இவை பலவும் சான்றோர் கருத்துகள், நல்வாழ்வு பெருக்கும் செயல் திட்டங்கள் என்பது தெளிவு.

நாடும் அரசும் பிறவும் மக்கள் வாழ்க்கைக்காகவே உள்ளன. வாழ்பவர் மக்கள்; எனவே, அவர்கள் தம் வாழ்க்கை அமைதிக்காகத் தாமே ஆக்கப் பணிகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.

ஒழுங்கு முறைகளைக் காப்பதற்காக ஒவ்வொரு நாட்டினும் அரசு அமைவது வழக்கம்; ஆகவே, மக்கள் தம் ஆக்கப் பணிகளைச் செய்துவருங் காலங்களில் அவர்கள் செயல்களுக்கு ஒழுங்கினங்களால் இடர்வருமானால், அரசு துணைசெய்து உதவும். மற்று, ஆக்க வேலைகளைச் செய்வதும் அரசின் முதற் கடமை யன்று. மக்கள், தாம் தாம் ஆக்கப்பணிகளைச் செய்துவர, அக் காலங்களில், அரசினர், அவரவர் நன் முயற்சிகளுக்குத் துணையாய் வேண்டுமானால் ஒவ்வோரளவு உதவலாம்.

நாட்டின் ஆக்கவேலைகள் என்பது மக்கள் கடமை; மக்கள் அவற்றைச் செய்யாமற் போதலால், அரசினர் அவற்றை மேற்கொள்ள முற்பட்டு அதனால் பல செலவினங்களுக்கு ஆளாகி, தம் முதற் கடமையாகிய ஒழுங்கு நிலை நிறுத்துதலில் வழுவிப் போகும்படியும் நேர்கின்றது.

மக்கள் தம் பொறுப்புணர்ந்து ஆக்கப் பணிகளில் தலைப்பட்டு

# அலங்காரச் சுவை

[ ரா. பி. சே. ]

அலங்காரம் என்றால் எல்லோருக்கும் ஆனந்தம். அன்பின் வழியே நிகழும் அலங்காரம் சிறந்த இன்பம் பயக்கும்.

குழந்தையை அலங்கரித்து இன்புறுவாள் தாய். காதலியை அலங்கரித்துக் காண்பான் காதலன். கவிதையை அலங்கரித்துக் களிப்புறுவான் கவிஞன். பரம்பொருளை அலங்கரித்து ஆனந்த பரவசமுறுவான் பக்தன்!

இந்த வகையிலே கந்தப் பெருமானைச் செந்தமிழால் அலங்கரித்த கவிஞர் பலர்.

சங்கத் தமிழால் அப் பெருமானை அலங்கரித்தார் நக்கீரர்; சந்தத் தமிழால் அலங்கரித்தார் அருணகிரியார்.

திருப்புகழ் என்னும் சந்தத் தமிழ் மாலை அணிந்த பின்னரும், ஆராத அன்பினால் அலங்காரம் ஒன்று செய்தார். அதுவே கற்றவர் போற்றும் கந்தர் அலங்காரம். * *

திருச்செங்கோட்டு முருகனை அலங்கரிக்கின்றார் அருணகிரியார். "செங்கோடனைச் சென்று கண்டு தொழ நாலாயிரங் கண் படைத்திலனே அந்த நான்முகனே" என்று பாடுகின்றார். *

காணக் கண் போதாது என்றால் போகட்டும்; வாழ்த்த வாயுண்டு என்று அலங்காரமாகப் பாடுகின்றார்.

"கருமான் மருகனைச் செம்மான் மகளை" என்பது ஓர் அலங்காரப் பாட்டு.

சாதிப் பெயர்களாகிய கருமான் செம்மான் முதலியவற்றை முருகப் பெருமானோடு இணைத்துள்ள சதுரப்பாடு நம் உள்ளத்தைக் கவர்கின்றது.

கருமானின் பின் செம்மான் வருவது அலங்காரமே என்று எண்ணி அகமகிழ்கின்றோம்.

பிறப்பும் இறப்பும் அற்ற பெருமானைக் கருமானோடும் செம்மானோடும் மாருலவனோடும் கைக்கோளனோடும் இணைத்துப் பாடிய அலங்காரப் பாட்டின் சுவை அன்பர் உள்ளத்தை அள்ளுவதாகும். * *

முருகப் பெருமானிடம் ஒரு வரம் வேண்டுகின்றார் அருணகிரியார். "பாலே அனைய மொழியார்" என்று பாடுகின்றார். இக் கவியிலே திருமாலுடைய அரவணையைக் குறிக்கும் மொழிகளில் அலங்காரம் இலங்குகின்றது.

ஆயிரம் தலையுடைய அரவத்தைக் 'கணபணம்' என்ற சொல்லாற் குறிக்கின்றார் அருணகிரியார். 'காலே மிக உண்டு காலே இல்லாதது' அக் கணபணம் என்கின்றார். கால் உண்டு கால் இல்லை என்று கூறுவது முரண்பாடாகத் தோன்றுகின்றதே எனத் திகைக்கின்றோம். சிறிது ஊன்றிச் சிந்திக்கும்பொழுது அச் சொல்லின் சுவையை அறிகின்றோம். * *

இத்தகைய அலங்காரம் தமிழ்க் கவிதையின் சிறப்பு! அதன் சுவையறிவும் செந்தமிழ்ச் செல்வத்தைக் கந்தப் பெருமான் அருளால் பெற்ற அறிஞர்தம் பெருமை சொல்லவும் அரிதே!

—ஞானசம்பந்த மலர்.

---

உருவான பல நற்செயல்களைச் செய்து உலகத்தில் வாழ்க்கை அமைதிக்குப் பாடுபடுதலே தக்கது.

Phone: 3419.
R. DASEN STUDIO
ELECTRIC PHOTO ARTISTS
1-48, RATTAN BAZAAR
MADRAS P. T.
Branches at :-
KARAIKUDI, MADURA,
COIMBATORE AND
PUDUKOTTAI.

KALI NATESA CHETTY
Iron & Hardware Merchant
260, Rasappa Chetty Street,
Park Town Post, MADRAS.

## கந்தர் கழலெழுபது

[ திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை M. A. ]

15. சாரில் வினையனைத்துஞ் சாடுவதும் பைங்கலபத்[1]
தேரில் இலகுவதுஞ் செந்தமிழ்ப்பன்—னீரில்[2]
முழுகுவதும் தானே முளைத்ததுவும் நங்கள்
[3]கழுகுமலைக் கந்தர் கழல்.

16. ஞானமாம் ஞானப் பொருளாம் நவிதலிலாத்
தானமாம் தத்துவமாம் சத்தியமாம்—கானமாம்
கான விளக்கமாம் காணரிய மெய்ப்பொருளாம்
கானமயிற் கந்தர் கழல்.

17. அன்புடைய தொண்டர்க் கமுதருத்தி என்றும்பே
ரின்புதவி ஏற்றமுவந் தீவதுவும்—நன்பதுமப்
போதன் முதலமரர் போற்றுவதுங் [4]காதலர்க்குக்
காதலமர் கந்தர் கழல்.

18. கந்தர் கழல்தான் கழறின் அருணைக்கிங்
கெந்த வகையில் இணையென்றால்—நந்தம்
அருணையைப்போல் ஆணவத்தார் அண்ணுகதாகுங்
கருணைநிறை கந்தர் கழல்.

கழலின் திறம்

19. எந்தை சிவனார் இமய மயில்தழுவும்
அந்தத் திருமார்பில் ஆடுவதும்—முந்தியுல
கண்டமெலாஞ் சுற்றியோ ரானைக் கிகலிவலங்
கண்டதுவுங்[5] கந்தர் கழல்.

20. ஏனமதைப் பற்றியே எற்றியே சுற்றியே
பீன[6] மருப்பைப் பிடுங்கியே—தானுமதைச்
சங்கரற்கு முன்பளிக்குந் தந்திரத்தில் முந்திநிற்கும்[7]
கங்கைபெற்ற கந்தர் கழல்.

21. இடிபட் டுதைபட் டெறிபட் டொடிபட்
டடிபட் டுடைபட் டசுரர்—பொடிபடவே
வந்ததே யுந்துபோர் மங்குரு அங்கணே
கந்தமார் கந்தர் கழல்.

---

1. கலபத்தேர்மா—கந்தரநுபூதி, 10.
2. "அடிமை சொலுஞ் சொற் றமிழ்ப்பனீ ரொடு"—திருப்புகழ், 186.
3. கழுகுமலை—திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள பிரபல சுப்ரமண்ய ஸ்தலம். திருப்புகழ் பெற்றது.
4. வாரமதாம் அடியார்க்கு வார மாகி—அப்பர். VI-86-4-திருவாலம்பொழில்.
5. சீர்பாத வகுப்பு.
6. பீனம்—பருமை.
7. ஆதிவராகத்தின் மருப்பை முருகவேள் பறித்ததும், சிவபிராற்கு அளித்ததும்—கந்தபுராணம் இரணியன் யுத்தப்படலம், 26. பாநுகோபன் யுத்தப் படலம் 3-ஆம் நாள், 63.

## பட்டேல் மறைவு

உதவி இந்திய முதலமைச்சர் வல்லபாய் பட்டேல், 15-12-50 காலை பம்பாயில் காலமானார். மக்கள் துயர்க் கடலில் ஆழ்ந்திருக்கின்றனர். அரசினர் ஒரு கிழமையாக உருக்கங் கொள்கின்றனர். தாயின் மணிக்கொடி தாழ்ந்து கிடக்கின்றது.

பட்டேல், நாட்டு விடுதலைக்குப் பெரும் பாடு பட்டவர்களில் ஒருவர். செயற்கரிய செயல்கள் செய்த பெரிய வீரர்! பர்தோலி வரிகொடா இயக்கத்தை நடத்தி நன்மதிப்புப் பெற்றதும், ஆட்சியில் அமர்ந்தபின், சிதறிக் கிடந்த சிற்றரசுகளை யெல்லாம் ஒன்றுபடுத்தி ஒரு குடைக்கீழ்க் கொண்டு வந்ததும் வரலாற்று ஏடுகளில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தகுந்தவை.

முன்னர் அசோகன், நாட்டின் பெரும் பாகத்தை ஒன்றுபடுத்தித் தன் ஆட்சிக்குக் கொண்டுவந்தான். அதன் பின், மறுமுறையாக வல்லபாய் தம் பெரு முயற்சியால் நாடு முழுதும் ஒன்றுபடுத்தினார். பிரிவு செய்வது யார்க்கும் எளிது; ஒருமைப்படுத்துவதுதான் அரிய திறம்! தெய்வப் பண்பு! அதனை உலகு வியக்கச் செயலில் இவர் நிறைவேற்றினார்.

மக்கள் இப் பெரியாரை மலையினும் மாணப் பெரியவர் என்றும், திரியாத உரமுடையவர் என்றும் போற்றுவர். எதிரிகளுக்கு நெருப்புப் போலவும், அன்பர்களுக்குத் தண்ணீர் போன்ற குளிர்ந்த தன்மையுடனும் விளங்கினார். முச்சிங்க இலச்சினையை ஆட்சி யடையாளமாகக் கொண்ட இந்திய நாட்டின் உள்நாட்டுப் பொறுப்பைக் கவனித்து வந்த இவர், சிங்க ஏற்றின் தோற்றத்தொடு வீறுற்றுத் திகழ்ந்தார்.

வல்லபாய் சேவை மறப்பரிது! இப் பெரியார் ஆவி, ஆண்டவன் திருவருட் பேற்றில் மேன்மேலும் மிளிர்வதாக! —முத்து.

---

'முல்லைக் கொடி'க்கு
எல்லா இடங்களிலும்
விற்பனையாளர் தேவை.

# -அவள் வாழ்க்கை-

[ அ. தி. வீரராகவன் ]

(முன் தொடர்ச்சி)

அன்றிலிருந்து மாறன் வீட்டில் அவள் வளர்ந்து வரலானாள். அவளை அன்புடன் 'பானு' என்று அழைத்து ஆதரித்தான். மாறனுக்கு உறவினர் என்று சொல்லிக்கொள்ள யாரும் இல்லை. ஒரு வீடும், இரண்டு பசுக்களும், அவன் தொழிலுந்தாம் அவன் சொத்துக்கள். பானுவைத் தன் மகள் போன்று பாதுகாத்தான் கிழ மாறன். அவளும் அவனை 'அப்பா' என்றே அழைத்துவந்தாள். இரண்டு ஆதரவற்ற உள்ளங்களிலும் அன்பு, ஆல் போல விழுது விட்டுத் தழைத்தோங்கியது.

பானுவுக்குக் கண்கள் இரண்டும் குருடே தவிர அறிவிலோ, செயலிலோ, பேச்சின் இனிமையிலோ அவளுக்கு ஒரு குறைவும் இல்லை. நாளடைவில் மாறன் குடும்பப் பொறுப்பு முழுதும் பானுவைச் சார்ந்துவிட்டது. அவளும் பாய் முடையக் கற்றுக்கொண்டாள். அழகாகவும், வேகமாகவும் முடைவதில் கருத்தூன்றி வந்தாள்.

ஒருநாள் மாலை ஐப்பசி மாதம் குளிர் காற்றுக்கு ஆற்றாமல் கிழவன் வீட்டினுள் கூடத்தில் இருந்தபடி பாய் முடைந்துகொண்டிருந்தான். ஏதோ வேலையாக வெளியே வந்த பானு வாயிற்படி அருகில் தடுக்கித் 'தடார்' என்று கீழே விழுந்து விட்டாள். அப்பா! அப்பா! என்று கூவிய வண்ணம் அயர்ச்சியடைந்தாள். குரல் கேட்டு, மாறன் 'சரேர்' என உள்ளிருந்து ஓடி வந்தான். வாயிற்படியில் இடித்துக்கொண்டான். தலையில் நன்றாக அடி பட்டுவிட்டது. தலையைக் கையால் தாங்கியவாறு வாயிற்படியிலேயே உட்கார்ந்துவிட்டான். யாவும் கண்மூடிக் கண் திறப்பதற்குள் நடந்தேறின.

இவ்வளவு கலவரத்துக்கும் காரணமாக இருந்தவன் ஒரு சிறுபையன். தன்னை மறந்த நிலையில் உறங்கிக்கொண்டிருந்தான். பானு தன்மேல் தடுக்கி வீழ்ந்ததுகூட அவனுக்குத் தெரியாது. கிழவனுடைய கூக்குரல் அவன் உறக்கத்தைக் கலைத்தது. பசியாலும் வழிநடந்த இளைப்பாலும் எழுந்திருக்கக்கூட இயலாமல் படுத்தவாறே கண்ணைத்திறந்து பார்த்தான். நடந்தவற்றை உடனே ஊகித்தறிந்தான்.

கீழே விழுந்திருந்த பானுவைச் சென்று தூக்கினான். தன் இடையில் கட்டியிருந்த துணியால், மோவாய்ப் பக்கம் காயம்பட்டு வழிந்துகொண்டிருந்த இரத்தத்தைத் துடைத்தான். பானுவும் மெதுவாய் நிமிர்ந்து உட்கார்ந்தாள். அவளை அவ்விடமே உட்கார வைத்துவிட்டுப் பக்கத்திலிருந்த மாட்டுக் கொட்டாய்க்குச் சென்று சாணம் கொண்டுவந்து மாறன் தலையில் வீக்கத்தின் மீது அப்பினான். அண்டையில் இருந்த பூவரசமரத்தினின்று சில கொழுந்து இலைகள் கொண்டுவந்து அரைத்துப் பானுவின் மோவாய்ப்புறம் இருந்த காயத்தைத் துடைத்து அதன் மீது வைத்து அப்பினான். மூவரும் விட்டினுள் சென்றனர்.

அவன் பெயர் வேலன். வயது ஒன்பது இருக்கும். சின்னஞ் சிறு வயதிலிருந்தே ஏதாவது சிறு கைத் தொழிலில் ஊக்கம் காட்டிவந்தான். பள்ளிப் படிப்பில் சிறிதுகூட அக்கறை காட்டவில்லை. அம்மாதிரி இருந்ததைக் குறித்துப் பெற்றோர் கண்டித்தனர். பயனில்லை. ஒருநாள் அவன் தந்தை வெறுப்பு மிகுதியால் அவனைச் சிறிது பலமாக அடித்துவிட்டார். அதனைத் தாளாமல் மானவுணர்ச்சி உந்த வெளிவந்தவன்தான் எங்கெல்லாமோ அலைந்து கடைசியில் மாறன் வீட்டுப் பக்கமாக வர நேர்ந்தது. வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தான், அவன் அன்று முழுதும் பட்டினி. நெடுந்தூரம் நடந்துவந்த களைப்பு ஒருபக்கம். இவற்றால் அவனுக்கு நல்ல உறக்கம் வந்துவிட்டது. சிறிது நேரம் தூங்கியிருப்பான். இதற்குள்ளாகத்தான் மேற்கூறிய நிகழ்ச்சி நேர்ந்தது,

'ஊழ்,' வேலனை மாறனிடமே ஒட்டவைத்துவிட்டது. தற்போது வேலன், பானுவுக்குத் தோழன். கிழவனுக்கும் வேலை சிறிது குறைந்தது. தினந்தோறும் பானுவைக் கைப் பிடித்து அழைத்துக்கொண்டு ஆற்றங்கரைக்குக் கோரை பறித்துவரச் செல்லுவான் வேலன்.

ஆற்றுமணலில் இருவரும் சிறிது நேரம் விளையாடுவர். 'கண்ணாமூச்சி' ஆட்டந்தான். ஆட்டத்தில் பானுதான் பிடிப்பாள். அவள் தன் கண்களைக் கட்டிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இயற்கை அத்தகு நிலையை அவளுக்குக் கொடுத்திருந்தது.

ஆண்டுகள் பல ஓடின. வேலன் காளைப்பருவம் அடைந்தான். பானுவுக்கும் பதினான்காம் ஆண்டு நடந்துகொண்டிருந்தது. முழு நிலாவை ஒத்த முகத்தில் கண்ணில்லாத களங்கம் ஒன்றைத் தவிர மற்ற இயற்கை வனப்புக்களில் குறைவின்றி விளங்கினாள் அந் நங்கை. வேலன் ஐந்தாவது வரை படித்தவன். தமிழை நன்றாக எழுதவும் படிக்கவும் தெரியும். அடிக்கடி பானுவின் கையைப் பிடித்து எழுத்துக்கள் எழுதக் கற்றுக்கொடுப்பான். அவள் தமிழை நன்றாக எழுதக் கற்றுக்கொண்டாள்.

வேலன் கோரைகளை நன்றாக, அளவாக வெட்டுவான். அதைப் பானு அழகான பாயாக முடைவாள்.

(தொடரும்)

**S. GANESHAM & SON,**

**Denatured Spirit, Paint Merchants & Commission Agents,**

Dealers in :—

English Disinfectant Fluid or (Phenyle), Genuine Turpentine, Dry Colours, Enamels, Oils Etc.

**1-44, Venkatachala Mudaly St., P. T., MADRAS-3.**

## "முல்லைக் கொடி"

குருகுலத்தின் கிழமை இதழ்.

நல்ல தமிழில்,
எல்லார்க்கும் புரியும் வகையில்,
எளிய விலையில்,
வாழ்வின் பலதுறைக் கருத்தில்,
சீர்திருத்த முறையில்,
சிறந்த ஆக்கப் பணி உருவில்
வெள்ளிக் கிழமைதோறும்
வெளிவரும்
ஒரு பெருந்தன்மையான
உணர்ச்சி வெளியீடு!

ஆண்டுக் கையொப்பம் ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

குறிப்பு :—

1. கார்த்திகை விழா முதல் (24-11-50) 'முல்லைக் கொடி' புது ஒளி பெற்று வெளிவருகின்றது, ஆண்டுக் கையொப்பமாகச் சேர்வோர், ஒரு மாதத்துக்குள் (பொங்கல் நாளுக்குள்) விரைவிற் சேர்தல் வேண்டும், அவர்க்கு இதழ்கள் குறைவின்றிக் கிடைக்கும்,

கிழமை இதழாயிருந்தும் இதற்குக் கட்டணம் குறைவு. ஆதலால், காலந் தாழ்த்து சேர்வோர், சேரும் நாளிலிருந்து வெளிவரும் ஏனை இதழ்கள் மட்டுமே முழுக்கையொப்பத்துக்கும் கிடைக்கப் பெறுவர்.

2. குருகுலத்தார்க்குக் கட்டணம் இல்லை; தமிழாசிரியர்க்கும், திருவள்ளுவர் கழகங்களுக்கும் ஆண்டுக் கையொப்பம் ரூ. 1½ மட்டும்.

3. 'முல்லைக் கொடிக்' கையொப்பங்கள் ஒவ்வோர் ஆண்டிலும் புரட்டாசிக் கலைமகள் விழாவுடன் நிறைவேறும்.



# குருகுலம், மாம்பாக்கம்;

(வடதிருச்சிற்றம்பலப் பெருவழி)

மதுராந்தகம் (அஞ்)

இது,

திருக்குறள் மறைக்குச்

**செய்கை நிலையம்.**

நாட்டு மக்கள். 'மொழி' 'கலை' 'தொழில்' 'அருள்' 'பணி' என்னும் ஐவகை வாழ்வியல் திறமைகளிற் சிறந்து திகழ்வதற்கு முயல்வது.

பள்ளி, கல்லூரி, கலையரங்கு, அச்சகம், நூற்பதிப்பு, இதழ்ப் பதிப்பு, படிப்பகம், தொழிலகம், அருள் நிலையம் முதலிய பல்வகை உறுப்புகளுடன் பணி புரிவது.

**வாழி, மன்பதை!**


OFFICE OF THE ... MADRAS 26 DEC 1950

பதிந்து அச்சிட்டு வெளியிடுவோர் : கி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்).